## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நகர அபிவிருத்தி மற்றும் முதலீட்டுக் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்று உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மெற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காயிவின் பகுதியொன்றாக, கணக்காயிவின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குற்ப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருன்மையான நிச்சியமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணப்பாய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்டுகின்றன. எவ்வாராயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதினை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்ருபடபதனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்மான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுகளின் பிரகாரம் பெறுமதி | தொடர்படைய அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| தேசத்தை கட்டியெழுப்பும் வரி | 648,257,352 | 648,767,630 | 510,278 | எதிர்காலத்தில் கணக்குகளில் சரியான பெறுமதிகளை கணக்குகளில் காண்பிப்பதற்க நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்காலத்தில் சரியான பெறுமதிகளை கணக்குகளில் சீராக்கம் செய்ய வேண்டும். |
| பொருட்கள் மற்றும் சேவைகள் வரி | 648,257,352 | 645,093,252 | 3,164,100 | | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கேட்போர்கூட ஒதுக்கீட்டுச் செலவினங்கள் மற்றும் நிர்வாக கட்டணங்கள் ரூபா 255,256 மீளாய்வாண்டிற்கு உரியதாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2019ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்குவைக்கப்பட வேண்டிய தொகை கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படடாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 32,044,737 | நிலையான சொத்துக்கள் பதிவேடு | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை தாயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை தயாரித்து நாளதுவரையாக பேண வேண்டும். |
| நேர வைப்புகள் | 750,000 | மீதி சான்றுபடுத்தல் கடிதங்கள் | எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | நேர வைப்புகளுக்குரிய மீதி சான்றுபடுத்தல் கடிதங்கள் துரிதமாக சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |
| வியாபாரக் கடன்பட்டோர் | 39,977,316 | நேரடியான சான்றுபடுத்தல்கள் | எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | வியாபாரக் கடன்பட்டோரின் நேரடியான சான்றுபடுத்தல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 வருடங்களுக்கு மேற்பட்ட பெற வேண்டிய மீதிகள் பின்வருமாறு.<br>• பெற வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணங்கள் ரூபா 2,698,338<br>• சம்பள முற்பணங்கள் ரூபா 15,000 | 2019ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய மீதிகள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு, அறவிடக்கூடிய மீதிகளை அறவிடுவதற்கும், ஏனையவற்றை கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 வருடங்களுக்கு மேற்பட்ட செலுத்த வேண்டிய மீதிகள் பின்வருமாறு.<br>• ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய பணம் ரூபா 626,050 ஆகும். | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய கழித்தல்கள் மற்றும் கொடுப்பனவு பரிந்துரைகளை பெற்று ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

### 1.7 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் கணக்குகளின் பிரகாரம், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நடைமுறைக் கணக்கின் மீதியயானது ரூபா 218,401,530 ஆன போதிலும், அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுகளின் பிரகாரம், கம்பனிக்குரிய நடைமுறைக் கணக்கின் மீதியானது ரூபா 217,312,856 ஆனமையால் ரூபா 1,088,674 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறைக் கணக்குகளுக்கு இடையிலான இணக்கமின்மைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

### 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2003 யூன் 02ஆந் திகதிய பீஈடீ/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.5ஆம் பிரிவு | வருடாந்த பொருள் மெய்மையாய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டு, பொருள் மெய்மையாய்வுப் பணிகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 256.9 மில்லியனான வரிக்கு முந்திய இலாபமாக காணப்பட்டதுடன், கடந்த வருடத்தின் இலாபம் ரூபா 206.7 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம், ரூபா 50.2 மில்லியனான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டின் போது நிறுவனத்தின் நிர்வாகச் செலவினம் ரூபா 8.8 மில்லியனால் குறைவடைந்தமை மற்றும் தேறிய நிதி வருமானம் ரூபா 41.7 மில்லியனால் குறைவடைந்தமை ஆகியன பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு**

| பிரதான வருமானம் | 2018/12/31 பெறுமதி | 2017/12/31 பெறுமதி | வேறுபாடு | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 196,480 | 2,404,849 | 2,208,369 | 92 |
| மதியுரைச் சேவைகள் மற்றும் முகாமைத்துவ வருமானம் | 4,549,511 | 7,081,965 | 2,532,454 | 36 |

| பிரதான செலவினம் | 2018/12/31 பெறுமதி | 2017/12/31 பெறுமதி | வேறுபாடு | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| கட்டிட பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு கிரயம் | 2,629,135 | 1,240,326 | 1,388,809 | 112 |
| சுத்திகரிப்பு செலவினம் | 1,405,800 | 627,000 | 778,800 | 124 |
| மருத்துவ செலவினம் | 318,102 | 955,300 | 637,198 | 67 |

**அவதானிப்பு**

01. 2017ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2018ஆம் ஆண்டின் போது எனைய செயற்பாட்டு வருமானங்கள் மற்றும் மதியுரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் வருமானம் ஆகியவை முறையே 92 சதவீதம் மற்றும் 36 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

02. 2017ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2018ஆம் ஆண்டின் போது, 3 செலவின கூறுகளின் மொத்த செலவினம் 50 சதவீதத்தினையும் விஞ்சியிருந்தது.

03. கட்டிட பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புக் கிரயம், சுத்திகரிப்புச் செலவினம் மற்றும் மருத்துவ செலவினம் ஆகியவை முறையே 67-124 சதவீதம் வரையான வீச்சில் அதிகரித்திருந்தது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

கடடந்த வருடத்தின் கம்பனியின் நடைமுறை விகிதம் 4.21:1 ஆக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது அது 7.53:1 வரை அதிகரித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது முயற்சிகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட பீஈடீ/12ஆம் இலக்க மற்றும் 2003 யூன் 02ஆந் திகதிய கட்டுப்பாட்டுச் சுற்றறிக்கையின் 7.3ஆம் பிரிவின் பிரகாரம் பொது முயற்சிகள், அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் அறிவுரைகள் அவ்வாறே பின்பற்றப்பட | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்படுகின்றது. |

வேண்டியதுடன், ஏனைய நடைமுறைகள் மற்றும் ஏற்பாடுகள் நிறுவனத்தின் தேவைப்பாடுகளுக்கு தோவையான வகையில் திருத்தப்பட்டால், அதற்காக வரிசை அமைச்சின் மற்றும் பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், கம்பனியினால் தயாரிக்கப்பட்ட செயல்நடைமுறைகள் மற்றும் ஏற்பாடுகள் தொடர்பில் அவ்வாறான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் 08 ஊழியர்கள் இரட்மை அடிப்படையில் நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனிக்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம், நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு தேவையான பதவியணியை முறையான நடைமுறையொன்றின் கீழ் ஆட்சேர்ப்பதற்குப் பதிலாக, நகர அபிவிருத்தி மற்றும் முதலீட்டுக் கம்பனியூடாக இணைத்துக்கொள்ளும் நடைமுறை தொடர்ந்தும் பின்பற்றப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கம்பனிக்கு தேவையான பதவியணி தொடர்பான தகவலைப் பெற்று அந்த எண்ணிக்கையான பதவியணியினர் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டியதுடன், நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு தேவையான ஊழியர்கள் இணைத்துக்கொள்ளக்கூடாது. |
| (ii) | 2003 யூன் 02ஆந் திகதிய பீஈடீ/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2(டீ) பிரிவின் பிரகாரம், கம்பனிக்கான நிறுவனக் கட்டமைப்பொன்று மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஆகியவற்றை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கம்பனிக்கு தேவையான பதவியணிக்குரிய அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது. |

## 3.3 வாகனக் கட்டமைப்பு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 17,965,769 கிரயமான லேண்ட்க்ரூசர் ரகத்திலான வாகனமொன்று, அது கொள்வனவு செய்யப்பட்ட 2014ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரின் பாவனைக்காக வழங்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | குறித்த வாகனம் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் பயன்படுத்தப்பட்டால், அந்த வாகனத்தின் பராமரிப்பு செலவினம் மாத்திரமல்ல சராசரி மாதாந்த வாடகையையும் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து கம்பனிக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

## 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் அடிப்படை நோக்கமாக எந்தவொரு பிரதேசத்தினதும் அபிவிருத்தி செயற்திட்டமொன்றினை மேம்படுத்தல், கட்டியெழுப்புதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகும். அவ்வாறான போதிலும், அடைவதற்க எதிர்பார்க்கப்பட்ட பௌதீக மற்றம் நிதி இலக்குகளை காண்பிக்கும் மூலோபாய வியாபார திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கம்பனியின் முதன்மையான பணிகளுக்காக பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் முகாமைத்துவத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாாண்டின் போது கம்பனியின் செயலாற்றல் கணக்காய்வின் போது கம்பனியின் செயலாற்றலை நிர்ணயிக்க முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனி தொடர்பிலான நீண்டகால மூலோபாயத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு, ஒவ்வொரு வருடமும் அந்த திட்டம் நாளதுவரையாக்கப்பட வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியின் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படவில்லை. | நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று அல்லது கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |

### 4.3 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியினால் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். |

### 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02ஆந் திகதிய PED /12 ஆம் இலக்கபொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5:2:4 ஆம் பந்தியின் பிரகாரம், வருடாந்த பாதீடு குறித்த வருடம் நிறைவடைவததற்கு 03 மாதங்களுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான பாதீட்டினை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வருடாந்த பாதீட்டினை தயாரித்து அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |